# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மீதான அரச செலவின மீளாய்வுக் குழுவின் அறிக்கை

## 1. பின்னணி

1.1. அமைச்சரவையின் 23/0256/604/030 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2023.02.06 ஆந் திகதியிடப்பட்ட தீர்மானத்தை அனுசரித்து நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் 2023.02.06 அன்று அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பித்தார். சொல்லப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் (இதனகத்துப் பின்னர் “அமைச்சு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) செலவினத்தை மீளாய்வதற்கு திறைசேரியின் செயலாளர் பின்வரும் நிபுணர்கள் குழுவினை (இதனகத்துப் பின்னர் “குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமித்தார்.

1.2 குழுவின் உறுப்பினர்கள் :

| | | |
|---|---|---|
| 1. திரு.ஆர்.எம்.பி. ரத்ணாயக்க | திறைசேரியின் பிரதிச் செயலாளர் | தலைவர் |
| 2. பேராசிரியர் ஜகத் முணசிங்க | தலைவர், நகர மற்றும் நாடு திட்டமிடற்றுறை, கட்டடக்கலை பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 3. கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி . யலேகம | மேலதிகச் செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு | உறுப்பினர் |
| 4. திரு. அஜித் துடாவே | சிரேட்ட பணிப்பாளர், துடாவே பிரதர்ஸ் (பிறைவேற் ) லிமிட்டெட் | உறுப்பினர் |
| 5. திரு.நதுண் பர்ணாந்து | பட்டயம்பெற்ற அளவீட்டு நில அளவையாளர் மற்றும் சட்டத்தரணி | உறுப்பினர் |
| 6. திரு.ஜே.எம்.ஹேரத் பண்டார | பணிப்பாளர் ,தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | கூட்டம் கூட்டுபவர்கள் |

1.3. திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட ஆய்வெல்லையில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பாணையின் பிரகாரம் பூச்சியம் அடிப்படையில் அமைந்த வரவு செலவுத்திட்டமிடற் கோட்பாடுகளின் அடிப்படையில் முறைமைசார்ந்த மீளாய்வொன்றினூடாக அமைச்சின் செலவினத்தை சீரமைப்பது குழுவின் பொறுப்பாகும்.

## 2. குழுக் கூட்டங்களும் நடவடிக்கை முறைகளுக்கான கட்டமைப்பும்

2.1. குழுவானது தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சிலுள்ள அலுவலர்களுடன் பல கூட்டங்களை நடாத்தியது. குழுவுக்கு உதவிய அலுவலர்களின் பெயர்ப்பட்டியல் **இணைப்பு 1** ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக் கூட்டங்களில் குழு, அமைச்சின் நிறுவனங்களின்

பொறுப்பாணைகள், பணியின் தற்போதைய நோக்கெல்லை மற்றும் அவசியமான மேம்படுத்தலுக்கான தொடர்புடைய நிறுவனங்களினாலாக்கப்பட்ட சமர்ப்பணங்கள் என்பவற்றை ஆய்வு செய்தது.

2.2 அதன் பின்னர், குழு அதன் பொறுப்பாணையினை முன்னெடுப்பதற்கு அனுசரிப்பதற்கு பின்வரும் கட்டமைப்பினை ஏற்றுக் கொண்டது:

அ. ஆய்வெல்லைக்கமைவாக அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிறுவனங்களினதும் கருத்திட்டங்களினதும் செலவினத்தை குழு மீளாய்வுசெய்தது. குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்ளல் மற்றும் பொருளாதார மீட்சியின் உடனடிக் காலப்பகுதியின் (அடுத்த 3-5 ஆண்டுகள்) முதலீடுகளின் நீண்டகால நிலைபெறுதன்மையினை உறுதிசெய்தல் என்பன மீது குழு விசேட கவனம் செலுத்தியது. இந்நோக்கில் "அமைச்சு" மற்றும் அதன் மேற்பார்வையின் கீழ் வருகின்ற முகவராண்மைகள் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற முன்னெடுக்கப்பட்டுவரும் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கு குறித்தொதுக்கப்பட்ட முக்கியத்துவங்களுடன் கூடிய பிரமாணத் தொகுதியொன்று பயன்படுத்தப்பட்டது.

ஆ. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தொடர்பில் கொள்கை வழிகாட்டளையும் தலைமைத்துவத்தையும் வழங்குவது மீது அமைச்சு கவனம்செலுத்த வேண்டிய கோட்பாடுகளை குழுவின் அணுகுமுறை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அபிவிருத்திச் செயற்பாடுகள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுவதன் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட சட்டங்களுக்கு இசைவாகவும் அதன் மேற்பார்வையின் கீழ் வருகின்ற முகவராண்மையினால் கொண்டு நடாத்தப்படும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் ஊடாகவும் இது மேற்கொள்ளப்படவுள்ளது. தேசிய அபிவிருத்தித் திட்டம், தேசிய பௌதீகத் திட்டம், சர்வதேச உடன்படிக்கைகள், சமவாயங்கள் மற்றும் இலங்கை ஒருதரப்பினராகவுள்ள உடன்படிக்கைகள் அத்துடன் துறைசார் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது.

இ. அமைச்சினதும் அமைச்சின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தனிப்பட்ட நிறுவனங்களினதும் தொலைநோக்கு, பணி மற்றும் கடமைகள் என்பவற்றை குழு மீளாய்வுசெய்தது. சனாதிபதியின் செயலாளரினால் வழங்கப்பட்ட PS/SP/SB/C/22/2019 ஆம் இலக்க 2019.10.03 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக அமைச்சின் தொலைநோக்கும் பணியும் வகுக்கப்பட்டிருந்தது என்பதை குழு கருத்திற் கொண்டது.

ஈ. நிலைபெறத்தக்க அபிவிருத்தி கோட்பாடுகளை மையப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் குழு ஏற்றுக் கொண்டது. நகரப் பிரதேசங்களில்

சக்திப் பாதுகாப்பு மற்றும் வளத் திட்டமிடல், நிலைபேறான போக்குவரத்து மற்றும் வளம்பெறத்தக்க போக்குவரத்து வழிமுறைகள், தூய்மையான வளி மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைமைகள், பொதுமக்கள் பொழுதுபோக்கு, அனைவருக்கும் வசதியளிக்கின்ற அபிவிருத்திக்கான ஈடுபாடு ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது.

## 3. குழுவின் முக்கிய அவதானிப்புகள்

"பூச்சிய - அடிப்படையில் அமைந்த வரவு செலவுத்திட்டமிடல் " போட்பாடுகள் மீது அமைச்சின் செயற்பாடுகளை திட்டமிட்டு அங்கீகரிக்கும் பொருட்டு அமைச்சினதும் திறைசேரியினதும் கொள்கை மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் தொடர்புடைய நிறுவனங்களினால் பின்வரும் தேவைகள் உடனடியாகக் கவணிக்கப்பட வேண்டுமென்பதை குழு குறிப்பிட்டது.

3.1. அனைத்து முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்களும் தேசிய பௌதீகத் திட்டத்தினையும் காலாந்தரமாக இற்றைப்படுத்தப்படும் தேசிய பௌதீகத் திட்டமிடற் கொள்கையினையும் கண்டிப்பான கடைப்பிடித்தலை குழு பரிந்துரைக்கின்றது.

3.2. நிர்மாணத் தொழிற்றுறை தற்போது தனியார் துறையால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது என்பதையும் குழு குறிப்பிட்டது. ஆகையினால் அமைச்சின் மையத் தொழிற்பாடு, நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறைகளில் முன்னணியாகத் திகழ்வதற்கு தனியார் துறைகளை ஊக்குவித்து வசதிப்படுத்தவதாக இருத்தல் வேண்டும். அமைச்சும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களுடன் கூடிய அதன் குறித்தொதுக்கப்பட்ட நிறுவனங்களும் தொழிற்றுறையினை ஒழுங்குபடுத்துவதன் மீதும் தொழிற்படுவதற்கு தனியார் துறையை இயலச்செய்கின்ற சூழலினை வழங்குகின்ற அதேவேளை நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திப் பணிகளில் நேரடியாக ஈடுபடுவதைவிட தரத்தினையும் நம்பகத் தன்மையினையும் உறுதி செய்வதன் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

3.3. தற்போது, நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறைகள் என்பவற்றுடன் தொடர்புடைய பல வகையான சேவைகளை வழங்குவதில் அதிக எண்ணிக்கையான அரசாங்க நிறுவனங்கள் இயங்குகின்றன. எனினும், இநநிறுவனங்கள் மத்தியில் இடைத்தொடர்பும் ஒருங்கிணைப்பும் பலவீனமாகக் காணப்படுகின்றது, இதன் விளைவாக, இரட்யாக மற்றும் மீண்டும் மீண்டும் செய்யப்படும் பணிகள் காணப்படுகின்றன. இது அரசாங்க வளங்களை விரைவாக்குவதற்கும் குழப்பங்கள் மற்றும் கொள்கை சார்ந்த தோல்விகள் மற்றும் வினைத்திறனின்மைகள் என்பவற்றுக்கும் வழிவகுக்கின்றன. தற்போதய சமூகப் பொருளாதாரப் பின்னணியானது அரிதான நிதியியல் மற்றும் ஏனைய மூலவளங்களை முகாமை செய்வதற்கு கண்டிப்பான வழி வகைகளையும் உபாய ரீதியான தலையீடுகளையும் வேண்டி நிற்கின்றது. ஆகையினால், அத்தகைய சிதைவுறுதல்கள் விரைவாகத் தீர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு செய்கின்ற போது சில நிறுவனங்களின் நோக்கெல்லை குறுகச்செய்யப்பட்டு பல்வேறு பணி

குறித்த கடமைகளுக்காக கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட சில நிறுவனங்களை தொடர்ந்து முன்னெடுப்பது மீளப்பரிசீலனையிற் கொள்ளப்பட வேண்டும்.

3.4. அரச பொறியியற் கூட்டுத்தாபனம், தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவனம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் போன்ற "வர்த்தக" தன்மையிலான தொழிற்பாடுகளை செயலாற்றுகின்ற அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்ச்சியாக நட்டமடைகின்றது என்பதனை குழு அவதானித்தது. ஆகையினால், காலத்திற்கு காலம் அவற்றின் சம்பளங்களும் ஏனைய தொழிற்பாட்டு செலவுகளும் திறைசேரியினால் தாங்கிக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. இந் நிறுவனங்களின் வகிபாகங்களும் உபாயரீதியான தன்மையற்றவை என்பதனால் திறைசேரி மீதான இந்நிறுவனங்களின் சுமையினை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றிய வழியினையும் முறைகளையும் ஆராயப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

3.5. இந்நிறுவனங்கள் பிரத்தியேகமாக அரசாங்க ஒப்பந்தங்ளை பொறுப்பேற்கின்றனவென்றும் ஏதேனும் போட்டி விலைக்குறிப்பீடு அல்லது முறையான பெறுகை வழிகள் ஊடாகச் செல்லாது "தனியொருவரிடம் சேவை பெறுதல்" ஒப்பந்தங்களின் அனுகூலத்தினை அவ்வப்போது பயன்படுத்திக் கொள்கின்றனவென்றும் குழு அவதானித்தது. இது சந்தை வினைத்திறனின்மையினை விளைவிப்பதுடன் அரச வளங்களின் துஷ்பிரயோக ஒதுக்கீட்டுக்கு வழிவகுக்கின்றது. இது ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

3.6. அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தினதும் கட்டடங்கள் திணைக்களத்தினதும் பொறுப்பாணையினை மீளாய்வு செய்வதனையும் கடந்த சில தசாப்தங்களுக்கு மேல் அவை செயலாற்றியுள்ள தனித்துவமான தொழிற்பாடுகளை மதிப்பீடு செய்வதையும் தற்போதைய சூழ்நிலையில் இந்நிறுவனங்களை தொடந்து முன்னெடுப்பதற்கான பொருத்தப்பாட்டினையும் மீளாய்வு செய்வதனை குழு பரிந்துரைக்கின்றது.

3.7. நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபை என்பன அவற்றின் "அத்தியவசிய மற்றும் மைய" தொழிற்பாடுகளில் கவனம்செலுத்தி அவற்றின் தாபனத்தின் தொடர்புடைய நpaதிச்சட்டங்களினால் அவற்றுக்கு குறித்துரைக்கப்பட்ட கடமைகளை ஊக்கத்துடன் செயலாற்றி அதிகாரங்களை பிரயோகித்தல் மீது கவனம் செலுத்த வேண்டும்.

3.8. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினை தொடர்ந்து முன்னெடுத்தலானது அதற்கு குறித்தொதுக்கப்பட்ட அநேகமான கடமைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அமைச்சினுள் ஏனைய சமாந்தர மற்றும் அதிக

செயலூக்கம்மிக்க முகவராண்மைகளால் நிறைவேற்றப்படக் கூடியதென்பதனால் மதிப்பீடுசெய்யப்பட வேண்டும்.

3.9. பாரியளவான சிவில் பணி ஒப்பந்தங்கள் தற்போது அமைச்சின் அத்துடன் இணைந்த நிறுவனங்களின் கீழ் செயலாற்றப்பட்டு வருகின்றன என்பதனை குழு அவதானத்தில் கொண்டது. இவ் ஒப்பந்தங்களில் அநேகமானவை நீண்ட தாமதங்கள், கால நீடிப்புகள், நோக்கெல்லை மாற்றல்கள், விலை உயர்வுகள், மோசமான ஒப்பந்தச் செயலாற்றம் போன்ற பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளன. மேலும், இத்திட்டங்கள் சிலவற்றில் முதலீடு மீதான ஆதாயமும் அவற்றின் நிலைபெறுதன்மையும் கேள்விக்குறியாகவுள்ளது. வேறு வகையில் செய்வதற்கு சிக்கனமான வாதத்தை நிர்ப்பந்திக்கின்ற அரிதான சந்தர்ப்பங்கள் காணப்பட்டாலன்றி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு தனியார் துறையினை இயலச்செய்யும் கொள்கையினை அமைச்சு பின்பற்ற வேண்டும்.

3.10. தற்போதய பேரண்டப் பொருளாதார தோற்றப்பாட்டினைக் கருத்திற் கொள்கையில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறைகளில் பாரியளவான அரசாங்க முதலீடுகள் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட முடியாதவையாகும். அதற்கமைய, தனியார் துறை பங்குடமைகளுடன் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வழிவகைகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும். வர்த்தகரீதியாக வளம்பெறத்தக்க கருத்திட்டங்கள் தனியார் துறைக்கு குறித்தொதுக்கப்படக்கூடிய அதேவேளை மேலே விளக்கப்பட்டவாறு அரசாங்க நிறுவனங்கள் அவற்றின் மையப் பொறுப்பாணை விடயப்பரப்பிற்குள் ஆதரவை வழங்க வேண்டும்.

## 4. <u>குழுவின் பரிந்துரைகள்</u>

### 4.1. பொதுவான பரிந்துரைகள்

4.1.1 மேலே குறிப்பிட்டவாறு வரவிருக்கும் காலப்பகுதியில் அரசாங்கம் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு துறைகளில் பாரியளவு முதலீடுகளை மூலவள மட்டுப்பாடுகள் அனுமதிக்காது. இது பல தனியார் துறை அபிவிருத்திகளில் வேறுபாடாக அமையக்கூடும். ஆகையினால் இம்மீட்சி காலப்பகுதியானது . உள்ளக மீளாய்வுக்கும் அவற்றின் செயற்பாடுகளை சீரமைப்பதற்கும் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் மூலம் காத்திரமான விதத்தில் பயன்படுத்தப்படலாம். இந்நிறுவனங்களின் நிலைபெறத்தக்க எதிர்காலத்திற்கு முக்கியமாக விளங்குகின்ற அத்துடன் துறையிலும் தேசத்திலும் முன்னேற்றகரமான அபிவிருத்தியிலும் “அத்தியவசியமானவை” மற்றும் “மையத் தொழிற்பாடுகள்” மீது விசேட ஒருமுகப்படுத்தல் உருவாக்கப்பட வேண்டும்.

4.1.2 நகர அபிவிருத்தி அதிகாரசபை, கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு குழு

பரிந்துரைக்கின்றது. இவ் வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(அ)அனைத்து நகரப் பிரதேசங்களுக்குமென அனைத்தையும் உள்ளடக்கியுள்ள அபிவிருத்தி திட்டங்களையும் கொண்ட தொகுதியினையும் உருவாக்கி வினைத்திறன்மிக்க அபிவிருத்தி அனுமதி இசைவுச் செயன்முறையொன்றுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அமுலாக்க பொறிமுறையொன்றுடனும் ஒருங்கிணைக்கப்பட்ட விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட அபிவிருத்தி ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்றை வகுத்தல் (நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம்);

(ஆ)உள்நாட்டு சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான அனைத்தையும் உள்ளடக்கிய கட்டடக் கோவையொன்றினை உருவாக்குதல், அவர்களது நடத்தையினை மதிப்பிட்டு ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரத்துடன் தராதரச் செயன்முறையாக தற்போதைய ஒப்பந்தகாரர் பதிவுச்செயன்முறையினை வலுப்படுத்தல் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் முறையான பயிற்சியினூடாக தராதரச்சான்று அளிக்கப்பட்ட தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களைக் கொண்ட தொகுதியினை உருவாக்குதல் (நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மூலம்);

(இ) கூட்டு ஆதன அபிவிருத்தி மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவம் அத்துடன் அவர்களது முதலீடு மீது கொள்வனவாளர்களின் நம்பிக்கையினை அதிகரிப்பதற்கு கூட்டு ஆதன அபிவிருத்தியாளர்களுக்கான தரப்படுத்தல் முறைமை உள்ளடங்கலாக பரந்த வகையான நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கு கூட்டுஆதனத் துறைக்கென நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு சூழல் ஒன்றினை உருவாக்குதல். (கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மூலம்) .

மேற்குறித்த முயற்சிகளுக்கு பாரியளவு மூலதனச் செலவினம் தேவைப்படாதிருக்கின்ற அதேவேளை, அவை நிர்மாணத்துறையின் விரைவான மீட்சிக்கும், உறுதிப்பாட்டுக்கும் நம்பகத்தன்மைக்கும் அத்துடன் தேசிய பொருளாதாரத்தின் நீண்ட கால வளர்ச்சிக்கும் பங்களிக்கும். முன்னுரிமை அடிப்படையில் இத்தகைய “முறைமைகள் உட்கட்டமைப்பு” அபிவிருத்திக்கு தேவையான அனுமதிகள் அதேபோன்று நிதியியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவினை அரசாங்கம் இந்நிறுவனங்களுக்கு வழங்குமென பரிந்துரைக்கப்பட்டுள்ளன. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டுஆதன முகாமைத்துவ அதிகாரசபை இரண்டும் அவற்றின் மையத் தொழிற்பாடுகளை செயல்திறன் வாய்ந்த விதத்திலும் வினைத்திறனுடனும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க தரநியமங்களுடனும் நிறைவேற்றுவதற்காக தொழில்சார் நிபுணர்கள் உள்ளடங்கலாக தேவையான தேர்ச்சிபெற்ற அலுவலர்கள் வலுப்படுத்தப்படுதல் வேண்டும்.

4.1.3. அமைச்சும் அதன் நிறுவனங்களும் கொள்கை வகுத்தலுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கும் முன்னுரிமையளித்து நிர்மாணச் சேவைகளை வழங்குவதற்கு தனியார் துறையினை அனுமதிக்க வேண்டுமென குழு வலியுறுத்துகின்றது. ஆகையினால், அரசாங்கமானது கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவுகளின் வகிவாகத்தை மீண்டும் பரிசீலிக்க வேண்டும். அத்தியவசிய மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்களுக்காக பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்வதை குழு பரிந்துரைக்கின்றது (ஏற்கனவே காணப்படுகின்ற ஆட்சேர்ப்பு கொள்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகள் ஊடாக குறிப்பான தேர்ச்சிகளில் ஆட்சேர்ப்பு மீது விதிக்கப்பட்ட தற்போதைய மட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு :

(அ) கருத்திட்ட முகாமைத்துவத்தை தொடர்புடைய நடைமுறைப்படுத்தல் முகவராண்மைகளுக்கு மாற்றுகின்ற சாத்தியப்பாடு அல்லது;
(ஆ) அமைச்சின் அலுவலர்கள் மூலம் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்; அல்லது
(இ) குறைக்கப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு அலுவலர்களுடன் தொடர்ந்து முன்னெடுத்தல்.

4.1.4. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் சமுத்திரச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை என்பவற்றின் தொழிற்பாடுகள் அமைச்சின் மையத் தொழிற்பாடுகளுடன் தொலைவில் இணையப்பெற்று சுற்றாடல் விவகாரங்களைக் கையாளுகின்ற மத்திய அமைச்சுக்கு அதிகம் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றமையினை கருத்திற்கொண்டு குழுவானது இந்நிறுவனங்களையும் தொடர்புடைய கடமைகளையும் மிகவும் பொருத்தமான அமைச்சுக்களின் கீழ் குறித்தொதுக்குவதற்கு பரிந்துரைக்கின்றது.

4.1.5. தேசிய மற்றும் பிராந்திய பௌதீகத் திட்டங்கள் மற்றும் அவற்றின் மீளாய்வுகளின் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களத்தின் கவனத்தின் மீது ஒருமுகப்படுத்துவதற்கான தேவையினை குழு அவதானிக்கின்றது. முறையான செலவு – நன்மை பகுப்பாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளுடன் பாரியளவிலான, தேசியளவிலான மற்றும் பிராந்தியளவிலான தாக்கம்மிக்க அபிவிருத்தியிலான மதிப்பீட்டில் திணைக்களம் முனைப்பாக பங்காற்றுகின்றது என்பது முக்கியமானதாகும். அதற்காக பொருத்தமான தகைமைபெற்ற தேர்ச்சியுள்ள மற்றும் தொழில்சார் அலுவலர்களை ஆட்சேர்ப்பது தேவையாகும். அது தற்போது முன்னெடுக்கின்ற புனித பிரதேச அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ தொழிற்பாடுகளை மத விவகார, கலாசார விவகார அமைச்சுக்கு அல்லது வேறு பொருத்தமான அமைச்சுக்கு/திணைக்களத்திற்கு கைமாற்றுவது ஆலோசிக்கத்தக்கதாக அமையலாம்.

4.1.6. அரச பொறியியல் கூட்டுத்தாபனம், தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

என்பவற்றை மறுசீரமைப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது. அரச பொறியியற் கூட்டுத்தாபனமானது கருத்திட்ட ஆலோசனை மற்றும் நிர்மாண மேற்பார்வை என்பவற்றில் கவனம்செலுத்தி நிர்மாணத்திலிருந்து விலகியிருக்கின்ற அதேவேளை தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர நிறுவனம் அத்துடன் வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் முடிவுறுத்தப்படலாம்.

4.1.7. அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களமும் கட்டடங்கள் திணைக்களங்களும் அவற்றின் பொறுப்பாணைகளையும் நிர்மாணத்துறைத் துறையின் முன்னேற்றத்துக்கான சாத்தியமான வகிபாகங்களையும் மீளாய்வு செய்தல் வேண்டும். தற்போதைய தொழிற்பாடுகளின் முறையும் பொறுப்பேற்புகளும் சந்தைப் பொருளாதாரத்தில் இனிமேலும் நியாயப்படுத்தத் தக்கவையல்ல. அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் தற்போதைய தொழிற்பாடுகள் அமைச்சின் தொழிற்பாடுகளுக்கும் பொறுப்பாணைக்குமான தொடர்பு தொலைவிலேயே காணப்படுவதுடன் பொருத்தமான நிரல் அமைச்சொன்றுக்கு குறித்தொதுக்கப்படலாம். அதன் தொடர்பும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் தற்போதைய பின்னணிகளிலும் அரசாங்கத்துறைத் தேவைகள் மற்றும் தொழிற்பாடுகளின் எதிர்கால நோக்குகளிலும் மீள மதிப்பிடப்பட வேண்டும்.

4.1.8 கட்டடங்கள் திணைக்களங்களானது அரசாங்கம் கட்டுவித்த உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்துனராக இருக்க வேண்டுமென்பதுடன் இனங்காணப்பட்ட அரசாங்கத்துறை கட்டுவிக்கப்பட்ட உட்கட்டமைப்புகளுக்காக (அலுவலகங்கள்/விடுதிகள்/ வைத்தியசாலைகள்/ பாடசாலைகள் போன்றன) குறைந்தபட்ச தரநியங்களை அறிமுகப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். இது இவற்றின் முக்கிய வழங்குநராக இருக்க்கூடாது ஆனால் அரசாங்க துறையில் சில வசதி குறைந்த பிரிவுகளுக்கான வழங்குநராக இருக்கலாம். கட்டடங்கள் திணைக்களங்களானது அரசாங்கத் துறையின் கட்டட தேவைகளை மதிப்பிடுவதற்கும். ஆற்றல்வாய்ந்த மதிப்பீடுகள்/வாழ்க்கைச் சுழற்சி செலவு மதிப்பீடு /செலவு நன்மைப் பகுப்பாய்வு என்பவற்றைக் கொண்டு தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் தேர்ச்சிபெற்ற அத்துடன் தொழில்சார் அலுவலர்களைக் கொண்டு வலுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் குறுகிய /நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் அரசாங்கத்துறை கட்டுவித்த உட்கட்டமைப்புகளுக்கான எதிர்வுகூறலுக்கு/திட்டமிடுதலுக்கு இயலுமாக இருத்தல் வேண்டும். தனியார்துறை முதலீடுகளுக்காக அத்தகைய கிடைக்கத்தக்க தன்மையினை எதிர்வுகூறுவதன் வாயிலாக போட்டி அடிப்படையில் தனியார்துறை நிறுவனங்களுடன் அரசாங்கத்துறை பணியாற்றுவதற்கு புதிய வழியொன்று உருவாக்கப்படலாம்.

4.1.9. கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாயின் சூழல் சிநேகம்மிக்க அல்லது நிலைபெறத்தக்க கட்டடப் பொருட்களின் புத்தாக்கம், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை பிரபல்யப்படுத்தி வசதிப்படுத்துவதற்கு அது மீளவடிவமைக்கப்படலாமென குழு

பரிந்துரைக்கின்றது. இதுவும் தனியார் அரசாங்கத்துறை பங்குடமைகள்/ கூட்டு முயற்சிகள்/ பல்கலைக்கழகங்களுடன் இணைதல் என்பதுடன் தொடர்புடைய ஆராய்ச்சிப் பணியினை நடத்துவதன் ஊடாக பொருத்தமானதாக அமைந்திருத்தல் வேண்டும். கட்டடப்பொருட்கள் கூட்டுத்தாபனமானது சூழல் நட்புமிக்க/நிலைபெறத்தக்க கட்டடப் பொருட்களில் தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்கான வசதிப்படுத்தும் மையமொன்றாக செயற்படலாம்.

4.1.10. நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு குறித்தொதுக்கப்பட்ட அனேகமாக அனைத்துப் பணிகளும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் உள்ளடக்கப்படுகின்றன என்பதை குழு அவதானித்தது. ஆகையினால், நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினை முடிவுறுத்துவதற்கு அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரிவோன்றாக நகரக்குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையை நியமிப்பதற்கு குழு பரிந்துரைக்கின்றது. தேசிய வீடமைப்பு அதிகாரசபையானது அதன் பொறுப்பாணையினைப் பேணி கொழும்பு மாநகரப் பிராந்தியத்திலும் இலங்கையிலுள்ள ஏனைய முக்கிய நகரங்களிலும் வீடமைப்புக்கான கேள்வியினை நிறைவுசெய்வதில் மிகவும் காத்திரமான வகிபாகத்தை ஆற்றக்கூடியது.

4.1.11. கல்குலம பயிற்சி நிலையம், நிர்மாண உபகரணங்கள் பயிற்சி நிலையம், வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டடங்களுக்கான நிலையம் போன்ற நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் சில பயிற்சி நிலையங்கள் தொழிற்படுகின்றதை குழு அவதானத்தில் கொண்டது. இந்நிறுவனங்கள் நிதியியல் ரீதியாக போரடுவதுடன் அவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகள் திறைசேரியினாலும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையினால், அரசாங்க மற்றும் தனியார் பங்குடமைத் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி நிறுவனங்களைத் தொழிற்படுத்தும் சாத்தியப்பாடொன்றை ஆராய்வதற்கு குழு பரிந்துரைக்கின்றது.

4.1.12. அமைச்சின்கீழ் வருகின்ற குறிப்பாக ஹொட்டல் டெவலப்மென்ற் (லங்கா லிமிட்டெட் மற்றும் சன்வியு டெவலப்மென்ற் பிறைவேற் லிமிட்டெட் போன்ற வியாபார நிறுவனங்களின் உரிமை மாற்றத்தை குழு பரிந்துரைக்கின்றது. செலந்திவ இன்வெஸ்மென்ட் நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதனை குழு மேலும் கவனத்தில் கொண்டது.

4.1.13. நீண்டகால நிலைபெறு தன்மை, செயல்திறன்வாய்ந்த தொழிற்பாடு என்பவற்றுக்காகவும் பொதுமக்களுக்கான அவற்றின் பொறுப்புக்களை உறுதிசெய்வதற்கும் உள்ளக நிறுவன முன்னேற்ற முகாமைத்துவ முறைமை, ஊழியர் செயலாற்றுகை மதிப்பீட்டுப் பொறிமுறைகள், தொடர்ச்சியான பயிற்சி, திறன் விருத்தி, முழுமையாக தானியக்கம் பெற்ற பணிச் சூழல் செலவு/இலாபம் -மைய அடிப்படையிலமைந்த உள்ளகப் பிரிவுகளின் மதிப்பீடு என்பவற்றை தாபிப்பதற்கு குழு வலுவாக ஆலோசிக்கின்றது.

4.2. **கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் குறித்த பரிந்துரைகள்**

4.2.1. நகர புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்க – தனியார் பங்குடமை கருத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்தகைய கருத்திட்டங்களுக்காக போட்டிவிலைக்குறிப்பீட்டுக்கு தனியார்துறை முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு "வர்த்தகப் பயன்பாடுகளுக்காக இடம்மாற்றி காணிகளைச் சுத்தப்படுத்தல்" என்ற முழுமையான தற்போதைய மாதிரி மீளக்கட்டமைக்கப்பட வேண்டும். சாத்தியமானவிடத்து வீடமைப்பு அபிவிருத்திகள் குறைந்த வருமானமாக வகைப்படுத்தப்படாது அதற்குப் பதிலாக குறைந்த வருமானத்திலிருந்து உயர் நடுத்தர வருமான வகையினரினையும் கொள்வனவாளர்களாக வரக்கூடியவர்களாக்க் கவர்வதற்கு பல அடுக்குகளுடன் நிறைவேற்றப்பட வேண்டும். குறைந்த வருமான வகைப்படுத்தலுடன் இணைந்த சமூகம் ஏற்றுக்கொள்ளாத நிலையினை இது தவிர்க்கலாம் என்பதுடன் கருத்திட்டத்தினூடாகவே முதலீட்டு மூலதனத்தை உருவாக்குவதற்கும் வசதியளித்து தனியார்துறை அபிவிருத்தியாளர்களுக்கு கவர்ச்சிகரமான தெரிவொன்றாக அமைந்திருக்கும்.

4.2.2. தற்போது இடம்பெறும் தாறுமாறான நகரத்தை திசை திருப்பும் பொருட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை விருத்தி செய்யத்தக்க காணிகள் கிடைக்கப்படுகின்ற பெறுவழி உயர்வாக்க காணப்படுகின்ற மற்றும் நகர வசதிகளும் பொதுச் சேவைகளும் கிடைக்கப்பெறுகின்ற பிரதேசங்களில் ஜயவர்த்தனகம, ரத்தொலுகம போன்ற வசதியான நடுத்தர வருமான வீடமைப்பு கருத்திட்டங்களை மீளத் தொடங்கலாம்.

கருத்திட்டங்களின் நிலைபெறு தன்மையினை உறுதி செய்வதற்கு அத்தகைய கருத்திட்டங்களின் தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் இறுதியாகப் பொறுப்பளிக்கத்தக்க முகவராண்மைகள் இகுறிக்கோள்களை எய்துவதில் உண்ணிப்பாக ஈடுபட வேண்டும். உதாரணமாக அருவக்காலு திண்மக்கழிவு முகாமைத்திட்ட கருத்திட்டத்தின் பிந்திய பாகத்தைநோக்கி தொழிற்பாடும் பராமரிப்பு பொறிமுறையும் திட்டமிடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. ஆகையினால் தொழிற்பாடு மற்றும் பராமரித்தலுக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனம் கருத்திட்டத்திற்கு வருகின்றபோது இறுதிக் கட்டத்தில் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு பொறிமுறைகளுடன் சுயமாகப் பரீட்சயமாவதில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றது.

4.2.3. நகர திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கும் கழுவுநீர் கருத்திட்டங்களையும். நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் உயர்வான செலவினை ஏற்றுக் கொள்கின்றது. தொழிற்பாடு மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களை தனியார் துறைக்கு ஒப்படைப்பதன் மூலம் அரசாங்கம் ஆரம்பச் செலவுகளை சமாளிக்கலாம்.

4.2.4. அமைச்சின் உண்மையான தேவைப்பாடுகளுடன் பொருந்தும் வகையில் வாகனத் தொகுதியினை சீரமைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேவையற்ற வாகனங்கள் ஏதுமிருப்பின் வேறு அரசாங்க முகவராண்மைகளுக்கு விடுவிப்பதன் வாயிலாக எரிபொருள் செலவினத்தை குறைக்கும் சாத்தியப்பாட்டை அமைச்சு ஆராயலாம்.

4.2.5. "சியக் நகர நிகழ்ச்சித்திட்டம்" இன்கீழ் நிறைவுசெய்யப்பட்ட திணைக்களத் திட்டங்களில் கிடைக்கப்பட்ட விலைப்பட்டியலினை தீர்ப்பனவு செய்வதற்கும் சாத்தியமாயின் இரு நோக்கெல்லை முறையில் உயர்வான பௌதீக முன்னேற்றத்துடன் கூடிய முடிவுறுத்துவதற்கு கடினமான துணைக் கருத்திட்டங்களை மாத்திரம் நிறைவுசெய்வதற்கு குழு பரிந்துரைக்கின்றது. பொது மக்களுக்கு ஏதேனும் இடையூறை ஏற்படுத்தாது அவை முடிவுறுத்தப்படக் கூடியதாயின் முன்னெடுக்கப்படுகின்ற துணைக் கருத்திட்டங்களை முடிவுறுத்துவதை குழு பரிந்துரைக்கின்றது.

4.2.6. கண்ணிவெடியகற்றலானது நோக்கெல்லையின் கீழ் காணப்படாமையினால் கண்ணிவெடியகற்றல் நிகழ்ச்சித்திட்டம் பொருத்தமான நிரல் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டமென குழு பரிந்துரைக்கின்றது.

4.2.7. புதிய பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் பஸ்தரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்குப் பதிலாக திரட்டு நிதியத்தைப் பயன்படுத்தி ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட பிரிவுகள் திறைசேரிக்கு சுமையை ஏற்படுத்தாது முறையான விதத்தில் பேணப்படுவதற்கும் பராமரித்தலுக்காக மாற்றுவழி நிதியிடல் வழிமுறைகளை இனங்காண்பதற்கும் பரிந்துரைக்கப்படுகின்றது.

4.2.8. துணைக் கருத்திட்டங்களின் குறிக்கோள்கள் சில சந்தர்ப்பங்களில் பிரதான கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களுக்கு இசைவாக வருவதில்லையென குழு அவதானித்தது*

* உதாரணமாக கருத்திட்ட அபிவிருத்திக் குறிக்கோளானது மரபுரிமையினையும் அதன் கவர்ச்சித் தன்மையினையும் பேணுவதற்கு முக்கியமாகக் காணப்படுகின்ற அதன் கலாசார மற்றும் இயற்கை மரபுரிமையை பாதுகாக்கும் நோக்குடன் அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பாகங்களுக்கு இடையிலான இணை அபிவிருத்தியின் சமநிலையான வழியினை ஊக்குவித்தலாக இருக்கின்ற அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்தினை குழு எடுத்துக்காட்டுகின்றது. எனினும், வாகனத் தரிப்பிடம், திறந்த வெளியரங்குகள், நிலத்தோற்றம் அமைத்தல் போன்ற பல நடைமுறைப்படுத்தப்பட்ட துணைக் கருத்திட்டங்கள் மூல நோக்கெல்லைக்கு இசைவாகக் காணப்படவில்லையென்பதுடன் முன்னுரிமை குறைவாகவுள்ளது. சில மைய துணைக் கருத்திட்டங்கள் இன்னும் தொடங்கப்படவில்லை.

4.2.9. பின்வரும் பிரமாணங்களைக் கருத்திற் கொண்டு, கருத்திட்ட சீரமைத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்தலுக்கான பிரமாணம் அடிப்படையிலான தெரிவு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையினை குழு முன்மொழிந்தது.

| இல. | தரப்படுத்தலுக்கான பிரமாணம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. | அரசாங்க- தனியார் பங்குடமைப் புள்ளிகளின் கீழ் எடுக்கப்படவுள்ள சாத்தியமான துணைக் கருத்திட்டம் (+10 அரசாங்க-தனியார் பங்குடமைக்கான உட்கட்டமைப்பினை உருவாக்குவதாயிக் மற்றும் -10 மாற்றுவழி நிதியிடல் சாத்தியமாயின்**)** | 10 |
| 2 | வெளிநாட்டு நிதி கிடைக்கும் துணைக் கருத்திட்டம் | 10 |
| 3 | நகராட்சி/உள்ளூர்/நகர அபிவிருத்தி அதிகாரசபை**/**இலஙகை காணி அபிவிரிருத்திக் கூட்டுத்தாபன வருவாயை மேம்படுத்துவதற்கான துணைக் கருத்திட்டம் | 10 |
| 4 | நகரத் தோற்றத்தை மேம்படுத்தும் துணைக் கருத்திட்டம் (அதாவது நிலப் பயன்பாட்டை மேம்படுத்தக்கூடிய நகர அழகை, பிரதேசத்தின் பயன்பாட்டுத் வாழ்வாதாரத்தை அதிகரிக்கின்ற சாத்தியமான பிரதேசம்) | 10 |
| 5 | ஒட்டுமொத்த சுற்றுச்சூழலை/காலநிலை தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தும் துணைக் கருத்திட்டம் (இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற கழிவு முகாமைத்துவம், வடிகால்**,** நீர்நிலைகளின் பாதுகாப்பு**,** வெள்ளப் பாதுகாப்பு போன்றவை) | 15 |
| 6 | சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சிக்கல்கள் இல்லாத/குறைந்தபட்ச துணைக் கருத்திட்டம் | 10 |
| 7 | எளிமையான தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு தேவையுடனான துணைக் கருத்திட்டம் | 05 |
| 8 | உள்ளூர் வேலைவாய்ப்பு உருவாக்கம்/வாழ்வாதார மேம்பாட்டிற்கு துணைபுரியும் துணைக் கருத்திட்டம் | 15 |
| 9. | காணிப் பிரச்சினைகள் (+15 காணிப் பிரச்சினைகள் இல்லாதவிடத்து மற்றும் -15 இன்னும் கையகப்படுத்தப்படாவிட்டால்) | 15 |
| | உயர்ந்தபட்ச மொத்தப் புள்ளிகள் | 100 |

அற்கமைய கருத்திட்டங்களின் முன்னுரிமை அட்டவனை இணைப்பு 2 ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

…………………………………
திரு.பி.எம்.ஆர். ரத்ணாயக்க
திறைசேரியின் பிரதிச் செயலாளர்
குழுவின் தலைவர்

…………………………………
கலாநிதி.எம்பி.எஸ்.எஸ்.எம்.. யலேகம.
மேலதிகச் செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
குழு உறுப்பினர்

…………………………………
பேராசிரியர் ஜகத் முணசிங்க
தலைவர், நகர மற்றும் நாடு திட்டமிடற்றுறை, கட்டடக்கலை பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்

…………………………………
திரு. அஜித் துடாவே
சிரேட்ட பணிப்பாளர், துடாவே பிரதர்ஸ் (பிறைவேற் ) லிமிட்டெட்
குழு உறுப்பினர்

…………………………………
திரு. நதுண் பர்ணாந்து
பட்டயம்பெற்ற அளவீட்டு நில அளவையாளர் மற்றும் சட்டத்தரணி
குழு உறுப்பினர்

பின்னிணைப்பு **– 1**

குழுவிற்கு உதவிய அலுவலர்களின்பெயர்

1. திரு. இந்திக பிரேமரத்ன - பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்
2. திரு. முபாரக் - பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்
3. திரு. இசான் துடாவே - பணிப்பாளர், துடாவே பிரதர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் - ஆய்வாளர்
4. செல்வி. ரொமாலி துடாவே - பணிப்பாளர், துடாவே பிரதர்ஸ் (பிறைவேற் ) லிமிட்டெட் - ஆய்வாளர்
5. திரு. காமினி ஜயசூரிய - அபிவிருத்தி அலுவலர், தேசிய வரவு செலவுத்திட்ட

**பின்னிணைப்பு – 2**

| கருத்திட்ட இல. | கருத்திட்டப்பெயர் | கருத்திட்டக் காலம் | மொத் மதிப்பிடப்பட்டசெலவு (மில்) | கருத்திட்டக் குறிக்கோள்கள் |
|---|---|---|---|---|
| 01. | நகர கருத்திட்ட தயாரிப்பு வசதி (இலங்கை அரசாங்கம்/ஆசிய அபிவிருத்தி வங்கி) [1] | 2020-2026 | 2,000 | நகர அபிவிருத்தி (உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகள் அபிவிருத்தி) |
| 02. | கொழும்பு மாநகர திண்மக்கழிவு முகாமைத்தவக் கருத்திட்ட [2] | 2017-2023 | 33,238 | நிலைபேறான தின்மக் கழிவு முகாமைத்துவ முறைமையை வழங்குதல் |
| 03. | உப நகர புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டம் – ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | 2019-2025 | 47,113 | குறைந்த வருமானம் பெறும் சமூகங்களின் வீட்டு நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் கொழும்பில் காணிப் பயன்பாட்டுத் வினைதிறனை அதிகரித்தல் |
| 04. | அநுராதபுரத்தில் உள்ள ஷோபித தேரோ கிராமத்தில் வீடுகளை நிர்மாணித்தல் – இந்திய மானியம் | 2018 -2023 | 555 | வீடற்ற மக்களுக்கு 153 வீடுகளை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் |
| 05. | இலங்கையின் 25 மாவட்டங்களில் மாதிரி கிராம வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் 600 வீடுகளை நிர்மாணித்தல் | 2017 -2023 | 300 | சமூகத்தின் வீட்டு வசதிகளை மேம்படுத்த 600 வீடுகளைக் நிர்மாணித்தல் |
| 06. | தென் மாகாணத்தில் வீடமைப்புக் கருத்திட்ட ம் )600 வீடுகள்-2017 | 2017 -2023 | 300 | சமூகத்தின் வீட்டு வசதிகளை மேம்படுத்த 600 வீடுகள் நிர்மாணித்தல் |
| 07. | இலங்கையின் வடக்கு மாகாணத்தில் வீடமைப்புக் கருத்திட்டம் 600 வீடுகள்-2019 | 2019 -2023 | 300 | சமூகத்தின் வீட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு 600 வீடுகளைக் நிர்மாணித்தல் |
| 08. | தென் மாகாணத்தில் வீடமைப்புக் கருத்திட்டம் கட்டம் II 600 வீடுகள் 2019 | 2019 -2023 | 300 | சமூகத்தின் வீட்டு வசதிகளை மேம்படுத்த 600 வீடுகள் நிர்மாணித்தல் |
| 09. | சியாக் நகர/நகர உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி [3] | 2021-2024 | 2,000 | வேறு நிறுவனத்தில் ஈடுபடாத நகர அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி திட்டத்தில் கருத்திட்ட அடையாளப்படுத்துல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான சீன உதவித் கருத்திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள் நிரமாணித்தல் | 2020-2026 | 31,269 | கொழும்பு நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு அலகுகளை வழங்குதல் |
| 11. | நகர புத்துயிரளித்தல் கருத்திட்டம் - இலங்கை அரசாங்கம் | 2016-2022 | 58,169 | சமூகத்தின் வீட்டு வசதிகளை மேம்படுத்த 15349 வீட்டு அலகுகளை பூர்த்தசெய்தல் |
| 12. | நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டம் | 2016 -2025 | - | நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கு வசதியான விலையில் வீடுகளை வழங்குதல் |
| 13. | யாழ்ப்பாண நகர மண்டப புனரமைப்பு | 2019- 2023 | 2,660 | யாழ்ப்பாணத்தில் பொது மக்களிடையே உள்ள சிரமங்களை தீர்த்தல் |
| 14. | ஒலியமுல்லை மழை நீர் வடிகால் மற்றும் சூழல் | 2018-2025 | 3,000 | பேலியகொடை மற்றும் களனி பிரதேசத்தின் வெள்ளத் தணிப்பு |
| 15. | கொலன்னாவ மழைநீர் வடிகால் மற்றும் சூழல் | 2018-2024 | 8,300 | உள்நாட்டு வெள்ளப் பெருக்கை குறைத்தல் பிரதேசத்தின் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துதல். |
| 16. | பேய்ரா ஏரி புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு கருத்திட்டம் | 2017-2020 | 12,550 | சுற்றுலா ஈர்ப்பு, வர்த்தகப் பெறுமதியை அபிவிருத்தசெய்தல். மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு |
| 17. | மோதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீள்குடியேற்றம் நிரந்த வீடுகள் | 2021-2025 | 43,540 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குதல் |
| 18. | உபாய நகரங்களின் அபிவிருத்தி - அனுராதபுரம் இலங்கை அரசாங்கம் – பிரான்ஸ் அபிவிருத்தி முகவராணமை) | 2016-2021 | 20,900 | நகர அபிவிருத்தி |
| 19. | "செமட நிவாஹனா " வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்) | 2020 -2026 | 10,663 | 9049 வீடுகளை நிர்மாணித்தல் |
| 20. | வீட்டுத் திட்டங்களை சீரமைத்தல [2] | 2021 -2023 | 126 | ஹிம்புடு உயனா மற்றும் கோதமிபுர சுத்திகரிப்பு நிலையத்தை பழுதுபார்த்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | பெய்ரா ஏரியின் நீரின் தரத்தை மீளமைத்தல் | வருடாந்தம் | 50 | 500 மிதக்கும் சதுப்பு நிலங்களை உருவாக்கதல் தொடர்ச்சியாf நீரின் தரத்தைக் கண்காணித்தல், வெள்ளம், தின்னமக் கழிவு, கழிவுநீர் வெளியேற்றும் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றைக் குறைத்தல் |
| 22. | கல்குளமவில் உள்ளதொழிற்படுத்தநர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி உள்கட்டமைப்பை அபிவிருத்தசெய்தல் | 2 ஆண்டுகள் | 243 | தொழில்நுட்ப பயிற்சியை தரமுயர்த்தல் |
| 23. | ஹோமாகம பிராந்தியத்தில் தொழில்நுட்ப நகரம்) வீதி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் | 2018-2022 | 6,902 | உடகட்டமைப்பு அபிவிருத்தி மூலம் மக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல் |
| 24. | வேரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம் [4] | 2013-2022 | 11,050 | வெள்ளத் தணிப்பு, வடிகால் மேம்பாடு மற்றம் தக்கவைப்பு பிரதேசங்ளைப் பாதுகாத்தல் |
| 25. | நகர அபிவிருத்தித் திட்டங்கள் – அனுராதபுரம் லொலுகஸவெவ புதிய நகர கருத்திட்டம் | 2016-2022 | 1,450 | கோட்டையின் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியை வசதிப்பத்தல்.கோட்டைகளை கருத்திற்கொண்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருதல் |
| 26. | கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் [5] | 2010-2027 | 4,410 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் |
| 27. | மூலோபாய நகரங்களின் அபிவிருத்தி – யாழ்ப்பாணம் (இலங்கை அரசாங்கம்-உலக வங்கி)[6] | 2016-2021 | 20,800 | நகர பிவிருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | கொழும்பு மாநகர அபிவிருத்திக் கருத் திட்டம் – (இலங்கை அரசாங்கம்-உலக வங்கி)[6] | 2018-2023 | 68,160 | கொழும்பு பெருநகரப் பகுதியில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும்பௌதீக மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணித்தல். கொழும்பு பெருநகரப் பகுதியில் உள்ள 4 உள்ளூராச்சி சபைகளின் பௌதீக உட்கட்டமைப்பு மற்றும்தொழிற்பாட்டு மற்றும் பராமரித்தல் இயலவை மேம்படுத்துதல். |

1. இது ஒரு திட்ட தயாரிப்பு வசதி என்பதால், தேவையான துணைத் கருத்திட்டங்களை நாம் தொடர்ந்து அடையாளம் காணலாம்.

2. கருத்திட்டம் நிறைவுசெய்யப்பட்டு அரசாங்க தனியார் பங்குடமையாக தொழிற்பாடுளை முன்னெடுத்தல் .

3. கிடைக்கப்பெற்ற விலைப்பட்டியல்களை தீர்ப்பனவுசெய்வதற்கு இணங்கியுள்ளதுடன் பொதுமக்கள் பாதுகாப்பு பிரச்சினைகள் மற்றும் அசைளகரியங்ளைத் தணிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து ஏனைய அனைத்து கருத்திட்டங்களும் இடைநிறுத்தப்பட வேண்டும்.

4. இக்கருத்திட்டம் தேசியசேமிப்பு வங்கியில் இருந்து கடன்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் கடனைத் திருப்பிச் செலுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் .

5. நகர அபிவிருத்தி திட்டங்களுக்காகப் பின்பற்றப்படும் பிரமாணத்தின் அடிப்படையில் இக்கருத்திட்டத்தின் முன்னுரிமை தீர்மானிக்கபட முடியாது.

6. கருத்திட்டம் ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டுள்ளது கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வரவசெலவுத்திட்ட ஒதுக்கீடு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது .